**இப்படி ஒரு கேள்வியா என நினைக்க வேண்டாம், குற்ற உணர்ச்சியால் தான் கேட்கிறேன், அதிகமான கொசுக்களை நேற்றும், இன்றும் கொன்று விட்டேன். கொசுக்களை கொல்வது பாவமாகுமா? பாவம் தான் என்றால் அதிலிருந்து மீள ஏதும் வழி உள்ளதா?**

உண்மையான மனத்துடன் கேள்வி பிறந்துள்ளது. தமிழில் ஒரு பழமொழி யுண்டு. அது, கொன்றால் பாவம் தின்றால் போயிற்று என்பதாம். அதாவது, உயிர்க்கொல்லல் பாவம் என்கிறது. Ecology எனும் சுற்றுச் சூழல் தத்துவம் எனும் உண்மைநிலை அறிந்தால் குழப்பம் நேராது. சிங்கம் புலி போன்ற விலங்குகளுக்கு, மான், மாடு, முதலியனவே தீணி. ஆடு, மாடு, மான் முதலானவை, தழை இலைகளை யுண்ணும். மனிதனும் அவன் மூதாதை இனம் என்பனவும், காய், கனி முதலானவற்றை யுண்ணும். பூக்களினின்று, வண்டுகள், தேனைச் சேகரிப்பதால்தால், மகரந்தச் சேர்க்கை நடைபெறுகிறது. ஆடுகள், யானை, பறவைகள் முதலானவற்றின் கழிப்பிலிருந்துதான், மரம், செடி கொடி முதலான மீண்டும் உயிர்ப்பிக்கப் படுகின்றன. ஆக, உயிர்வாழ அனைத்து உயிர்களும் உண்ணல் வேண்டும். தொல்காப்பியர், அவற்றின் நிலைக்கலனை அழகுடன் தொகுத்துள்ளார். வாழும் வழி சொல்லும் பொருளிலக்கணம் கொண்டது, தமிழ் மொழி ஒன்றே!. நிற்க, அங்ஙனம் கொல்லுமிடத்து, உணவுக்காக வன்றி கொல்லல் பாவம் எனலாம்! எந்த விலங்குகளும் தேவைக்கன்றி கொல்லுவதில்லை. நம்முடைய வாழ்க்கை முறை, மாறியதால், கொசு உற்பத்தியும் தொல்லையும் அதிகமாகிவிட்டன. வயல் வெளிகளில் வாழ்ந்தவை, வீட்டுக்கருகில் சாக்கடை தேங்குவதால், எளிதில் பெருக்க மடைகின்றன. கொசுவைக் கொல்லல் கூட தவறு என் எண்ணத்தலைப் படும் போது, அச்செயல் மன்னிக்கப் படுவதாக, அனைத்து மதநூல்களும் கூறுகின்றன. சுமார் 15 ஆண்டுக்ளுக்கு முன் ஒரு கவிதை எழுதினேன். சாரம், இறைவா, இரவில் உறக்கமாய் எழுதிவைத்து, கொசுவை படைத்திட்டாயே, அவை உறக்கத்தை கெடுக்கையில், உன்னையும் மீறிய தாக அல்லவா உன்படைப்பு திகழ்கிறதே, உண்மையில் உலகினை ஆள்வது யார் எனமுடியும் அக் கவிதை. படித்தோர்க்கு நன்றி! **20-08-2020**

## தமிழில் வழக்கொழிந்த சொற்கள் யாவை?

வழக்கொழிந்தவை எனும் சொல்லும் வகையில் அதிகச் சொற்கள் இல்லை. ஏனெனில், சீரிளமையுடன் வாழும் ஒரு மொழி, சங்க இலக்கியமும், பின்நாள் இலக்கியமும் இன்றும் படிக்க இயலும் புரிந்து கொள்ள இயலும். வட்டாரவழக்குச் சொற்கள் கூட வழங்கித்தான் வருகின்றன. பேசுகின்ற வட்டார முறைமை வேண்டுமானால் கொஞ்சம் கொஞ்சமாகத் திரிந்து வரலாம். சென்னைத் தமிழ் எனும், உருது, தெலுங்கு கலந்த தமிழ் இப்போது இல்லவே யில்லை. நெல்லைதமிழ், மதுரைத்தமிழ், கோவைத் தமிழ், தஞ்சைத் தமிழ் கொஞ்சம் மாறுதலுக்கு உட்படுகின்றன. ஒரு காலகட்டம் வரை, சினிமா நாடங்களில், தஞ்சைத் தமிழ்தான். பாரதி ராஜாவுக்குப் பின் தான் தென்னாட்டு வழக்கு வந்தது. சென்னைத் தமிழைக் கூட நான் ரசித்திருக்கிறேன். வெள்ளந்தியான மக்கள் சென்னை பூர்வீகக் குடிகள். அனைத்து ஊர்களிலும் வட்டார வழக்கோடு, அம்மக்கள், பேசும்போது, ஓர் அழகு உண்டு. கொஞ்சு தமிழ் கோவை, அன்புதமிழ் நெல்லை, செந்தமிழ் தஞ்சை இப்படியாக. தஞ்சையிலும்

நெல்லையிலும் வயல், செங்கையிலே கழனி. மேற்கில் காடு. நாற்பது ஆண்டுகளுக்கு முன், மாவட்டங்களின் அடையாளம், நெல்லையில் பிறந்து, நெல்லையிலேயே கடலில் கலக்கும் தாமிரபரணி, ஏரிகள் நிறைந்த செங்கை. மலைகளே இல்லாது, கோயில்கள் நிரம்பிய தஞ்சை. இப்படியாக. மதுரை இன்றும் செந்தமிழ்தான். யானைக்கல், சிம்மக் கல், விளக்குத்தூண். இப்படியாக. ஓரிரு சொற்கள் மருவி இருக்கலாம். உலகில் மரபு வழியில் பெயரிட்டவன் தமிழன் மட்டுமே. மூங்கில் புல்லின் இனம் என்பதால் புல்லாங்குழல் ஆனது. தமிழும் படியுங்கள். தாய்மொழி அறிவுதான் சிந்திக்கத் தூண்டும். ஒரு மொழிப் பாடமாகப் பள்ளியில் படியுங்கள். கலையும் வீரமும் செறிந்தது நெல்லை மண். கலை வளர்த்தது தஞ்சை. தமிழ் வளர்த்து மதுரை. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என அனைத்து உயிர்களையும் நேசிக்கச் சொன்ன வள்ளுவன். எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் என்ற வள்ளுவன், ஞாயிறு போற்றிய இளங்கோ. உலகையே ஒரு குடையின் கீழ் கண்ட கணியன் பூங்குன்றன். எல்லா மொழிகளும் சிறப்புடையன. ஒரு தனித்தன்மை கொண்டவை. சிந்தை தூண்டிய வகையிலேயே, இலக்கியம் சீர்நடை கொள்ளும். ஆங்கில இலக்கியம் வளர்ந்த காலமே, உலகின் பல நாடுகள், அவர்தம் காலனி யாகின. போற்றுதலும் தூற்றுதலும் வேண்டா. மொழியைக் கற்றிக் கொடுங்கள், ஒரு பாடமாக, ஆங்கில வழியில் பயின்றாலும் பரவாயில்லை. அது, இன்றையத் தேவையாய் உள்ளது. விரும்பும் இன்னொரு மொழியை கற்றுக் கொடுங்கள், தாய் மொழியைப் போற்றிப் பயிலுங்கள். அஃதொன்றே உங்களை மேம்படுத்தும். **23-09-2020**

## கருணாநிதியின் மஞ்சள் துண்டு பகுத்தறிவா?

பகுத்தறிவு என்பது, ஒன்றினை பகுத்து, உண்மை யுணர்தல் எனலாம். அது மெய்யறிவு நிலை. அச்சொல்லாட்சியை ஒரு சாரர் பயன்படுத்திய விதமும், அஃது ஏதோ எதிர்வாத கருது கோள் என்றோ கொள்ளும் நிலைப் பாடு மிகுந்து விட்டது. பகுத்தறிவு என்றால், அது மூடநம்பிக்கை என ஒன்றைச் சாடும் என்றோ, கடவுள் மறுப்புக் கொள்கையின் தூண் என்றோ கொள்ளல் ஆகாது. பூமியைச் சுருட்டி, பாதாளத்தில் வைத்தான், என்பன போன்றவற்றைப் பற்றிக் கூறுமிடத்து, உண்மை யுணரச் சொன்னதால், அதனைப் பகுத்தறியும் அறிவு என்றனர். இந்த மஞ்சள் துண்டு, ஜோதிடத்தின் பால் கொண்ட நம்பிக்கைக் காரணமாக இருக்கலாம். அந்நிலையில் அதனை அவர் பகுத்துணர்ந்து இருக்கலாம். ஒருவரையொருவர் சாடிக்கொள்ளவும், குறை கூறவுமே இந்தக் கோரா தளத்தைப் பயன்படுதுகின்றனர். **23-09-2020**

## ரோஷம் எனும் சொல்லுக்கு இணையான ஆங்கிலச் சொல் யாது?

ரோஷம், கோபம், ஆத்திரம் யாவும் கிட்டதட்ட ஒத்த பொருளுடையவைதான். ஆத்திரம் என்பது பொதுக் காரணியாகவும், ரோஷமும் கோபமும் தனிக் காரணியாகவும் அமையும். கோபம் இயல்பாகவும், ரோஷம் கொஞ்சம் அதிக கோபமுடையதாகவும் காணலாம். Angry or anger, irritation, are having relevance to these above words. தன்னையுணர்ந்தவனது கோபம் ரோஷம் ஆகலாம். கிரந்த எழுத்து விரவி வருதலான், இச்சொல் தமிழல்ல என்றுதான் கருத வேண்டியுள்ளது. பேசுதல் என்பதற்கு தமிழில் 46 சொற்கள் உண்டு. சொல் என்பதைக்கூற 18 உண்டு. செப்பு, பறை, கூறு, விளம்பு, விளி, அழை, மொழி, சொல்

எனும் வகையில். தமிழில் ஒவ்வொன்றும் தனித்த பொருளுடையன. தமிழினின்று பலச் சொற்கள், பிற மொழிகளில், கலந்துள்ளன, காலத்தால் திரிந்தவையும், திரிக்கப் பட்டவையும் உண்டு. அரண் எனும் சொல் இராணுவமானது. அரசனே ராஜாவானான். கட்டுமரன், மைதானம், ஆகியவை தமிழினின்றுதான் ஆங்கிலத்துக்குச் சென்றன. தமிழின் இன்னோரு வடிவமாக இருந்த பிராகிருதத்திலிருந்து தான், சமஸ்கிருதம் தோன்றியது எனில், ஏற்றுக் கொள்வார் இல்லாத போது, இத்தகைய ஆய்வுகளை எங்கு கொண்டு நிறுத்த முடியும்? பிள்ளைகளுக்கு தமிழை ஒரு மொழிப்பாடமாகச் சொல்லிக் கொடுங்கள். இறுதியாக தங்கள் கேள்விக்கு வருவோம். எல்லா மொழிகளும் ஒரு வகையில் தனித் தன்மை கொண்டு இலங்குவன. ஆகையினாலே ஒத்த சொற்களை மட்டுமே காண முடியும். On getting irritated, he becomes anger என்பதை ரோஷத்துக்கு இணையாகக் கூற முடியும். நன்றி! **24-09-2020**

## தம்பதி என்னும் சொல்லுக்கு வேறு பெயர் என்ன?

முன்னம் எவ்வழக்கில் இருந்தது எனத் தெரியவில்லைசங்க இலக்கியங்களில் . மனை .இல்லறத்தை மனையறம் என்கிறார் இளங்கோவடிகள் .தேடினால் கிடைக்கும் இணையர் எனுஞ்சொல் இன்று .யெனுஞ் சொல் கன்னடத்தில் வீடு என்பதாகிறது வடமொழி யெனும் சமஸ்கிர .அது புதிய சொல்லாட்சி தான் .வழக்கில் உள்ளதுூத திணிப்பால், பல செஞ்சொற்கள் வழக்கொழிய, சில திரிந்து போக, இன்னும் சில ஆண்டுள் அடுத்தடுத்த தலைமுறை Language is a tool for communication எனும் நிலையில் இன்னும் சிதிலமாக்கப்படும் .1905 ல் ரூபாய் நோட்டில் இருந்த இராஜஸ்தானி இன்று இளையரிடத்து பேச்சு வழக்கில் இல்லை. தமிழ் அரசியல் களத்தில் இறக்கப் பட்டுள்ளதால், அதன் வாழ்வுக்கும் சிதைவுக்கும் அதுவே. காரணமாகிறது. ஒவ்வொரு சொல்லும் பொருள் குறித்தனவே என்கிறார், தொல்காப்பியர். **28-11-2020**

## கூட்டம் என்ற தமிழ்ச் சொல்லில் இருந்துதான் கோத்திரம் என்ற சம்ஸ்கிருத சொல் வந்ததா?

கோத்திறம் எனும் தூய தமிழ்ச்சொல்தான், எழுத்து இல்லாமையால் கோத்திரம் ஆனது. கோ-திறம் என்று, கோ என்றால் தலைவனாகிய, முன்னோரின், செயற்கரிய செயல் செய்த ஒருவரை, அல்லது, குடி வகையில் அவர்தம் பெருமை அல்லது சிறப்பை உணர்த்துவதால், கோத்திறம் ஆனது. பிராமணர்கள் குரு பரம்பரை என்பர். பிறதமிழரில் கோத்திறம் அல்லது பட்டம் எனும் வழக்கு உள்ளது. ஒரே கோத்திறம் அல்லது பட்டம் எனில், ஒரு முப்பாட்டன் வழி பிறந்தவராயிருந்து, பங்காளி ஆவதால், அவர்களுக்குள் திருமணம் செய்ய மாட்டார். பிராமணரில், அய்யர்களின் நான்கு பிரிவிலும் (வடமா, வாத்திமா, பிரஹசரணம், அர்த்த சாஸ்திரம்). ஒரே கோத்திரம் வரும். முன்னர் உட்பிரிவுகளில் திருமணம் செய்வதில்லை. தற்போது, செய்யும் போது, கோத்திரம் பார்கின்றனர். அய்யங்காரில், மூன்று பிரிவு. வடகலை தென்கலை தென்னாச்சாரியர். கோத்திரமும் அப்படித்தான் ஒன்றாகவே இருக்க வேண்டும். சேக்கிழார், சாண்டில்யன் யாவும் கோத்திறப் பெயர்களே! பிற தமிழர்களில், இனம் என்னும் சாதி கூட்டமைப்பு

ஒன்றாயிருக்கும். சைவம், வைணவம் என்னும் வேவ்வேறு மதப்பிரிவு இருந்தாலும், இனத்தின் அடிப்படையில் திருமணம் செய்து கொள்வர். **26-12-2020**

## மூன்று நோபல் பரிசார்களையும் மற்றும் ஒரு கணித மேதையையும் தமிழகம் அவ்வளவாக போற்றுவதில்லையே, ஏன் அவர்கள் பிராமணர்கள் என்பதாலா?

மு.இராகவ ஐயங்கார், P T.சீனிவாச ஐயங்கார், ஆகிய இவ்விரு தமிழறிஞர்களை எத்துணை பிராமணர்களுக்குத் தெரியும்? இதன் உண்மையை புரிந்து கொள்ளலே, தாங்கள் தேடும் விடை.

## தமிழினத்தின் மொழி தமிழ், தெலுங்கர்களின் மொழி தெலுங்கு, மலையாளிகளின் மொழி மலையாளம், அப்படியானால் திராவிடத்தின் மொழி என்ன?

தமிழ்தான். 1500 ஆண்டுகளுக்கு முன் இம்மொழிகள் இல்லை என்பது வரையறை. ஆனால், சங்க காலத்துக்கு முந்தையத் தமிழை, தொல் தமிழ் எனும் விதமாக, தொல் திராவிட மொழி என்பர் மொழி அறிஞர். அன்றைய மொழிக்கும், இன்றைய மொழிக்கும் யாதொரு வேற்றுமையும் இல்லை. பிரிவுக்கு முன்னால் இருந்த நிலை, தொல் மொழி யாயிற்று. தெலுங்கு மட்டும் தென் திராவிட மொழி எனப்படும். அந்தப் பழமையின், பொது வரையறைக் கொண்டே, மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலான செம்மொழி யாயின. வடமொழி எனும் சமஸ்கிருத மொழி உருவாகி, அதன் தாக்கம் தமிழில் ஏற்பட்ட போது, மற்ற மொழிகள், வட்டார மொழிகள் எனப் படும், திசைசொல் நிலையிலிருந்து தனி மொழியாயின. எழுத்தச்சன் சுமார் 600 ஆண்டுகளுக்கு முன் தான், மலையாள மொழிக்கு எழுத்துரு செய்தார். ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனிச் சிறப்பு உண்டு. உயர்வு தாழ்வு கொள்ளல் முறையன்று. தமிழின் சிறப்பு என்பது, தொன்மை சொல்லாடல் முதலியன. இந்தியாவில் 22 தேசிய மொழிகள் இருந்தாலும் 8 எழுத்து வடிவங்களே உண்டு. இந்தியும் ஆங்கிலமும் ஆட்சி மொழி. கால்டுவெல் எனும் மேநாட்டு அறிஞர் தென்னிந்திய மொழிகளை ஒப்பாய்வு செய்து, இவற்றைத் திராவிட மொழிக்குடும்பம் என்றார். தமிழரை சுட்ட திராவிடம் எனும் சொல் பயன் படுத்தப் பட்டதாகவும் கூறுவர். தமிழ் என்பதுதான், திரமிளம், என்றாகி பின் திராவிடம் ஆனது எனும் தமிழரிஞரும் உண்டு. **20-06-2020**

## உண்மையாகவே கலைஞர் கருணாநிதி அவர்கள் பயணச்சீட்டில்லாமல் தான் சென்னைக்கு வந்தாரா? எதனைக் கொண்டு அவர் வித்அவுட்டில் வந்தார் என்று கூறுகிறார்கள்?

அவரை முற்றிலும் தெரியும். காமராஜருக்கு நிகராக மக்கள் தொண்டு செய்தவர். பிராமணர் மட்டுமல்ல முன்னேறியிருந்த முற்படுத்த பட்ட சமூகத்தாருக்கும் கலைஞரைப் பிடிக்காது. நாவலர் முதலான, மதியகழன் ஆகிய தூண்களோடு, பேராசிரியர் போன்றோரை ஒதுக்கி முதல்வரானார் எனும் நிலைப்பாடு. காமராஜரின் கல்வி முதலானவற்றை காத்தார்.கல்வியை விற்று, கிராமப் பொருளாதாரத்தைச் சீரழித்து,

மக்களை நகர்ப்புரம் நோக்கி வரச் செய்து 'இலவசங்களை வழங்கி மக்களைக் கெடுத்தது.....மாண்புமிகு ம.கோ.ரா. **12-12-2020**

## தமிழ் மரபுக்கவிதைகளுக்கும் தமிழ் புதுக்கவிதைகளுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

மனைவி!
இருபதின் வழியில் தேவதையாய் நின்றவள்!
முப்பது நிறைகையில் முகவரி தந்தவள்!
நாற்பதின் தொடக்கத்தில் நச்சரிப்பானவள்!
ஐம்பதில் நாமே அனுசரித்துப் போய்விட,
அறுபதின் தொடக்கத்தில் அன்பால் நிறைவாள்!
உருபெறும் வாழ்வின் உன்னதக் காலம்;
எழுபதைத் தொட்டபின் எழுந்து நிறையும்!
- கவிவளவன் 06-45 AM. 14-06-2020

**இதனை மரபுக் கவிதை எனலாம்.**

மயக்கம்!
சோர்ந்த விழிகள்,
பசியின் மயக்கத்தில்;
காமிராப் பதிவுகளில்,
ஏற்க மறுத்தச் சுயம்!
கொள்ளை நோயைத்
தாண்டியக் கொடூரம்,
வயிற்றில் சுரக்கும் அமிலம்!
இரண்டுக்கும் முடிவு ஒன்றேதான்! -**கவிவளவன்** (22-04-2020)

**இதனை புதுக்கவிதை அல்ல மரபுசாராதது எனச் சொல்லலாம்.**

## நீர்வீழ்ச்சி என்பது தமிழ் சொல்லா இல்லையா?

தாங்கள் கேட்க விழைந்தது வேறு. கேட்டது வேறு. நீர் வீழ்ச்சி என்பது தமிழ்ச் சொல்லே. **Water Falls** எனும் ஆங்கிலச் சொல்லுக்குத் இணையாக தமிழில் பயின்று வரும் சொல். தமிழில் தனியே ஒரு சொல் பயின்று வருகிறது பன்னெடுங்காலமாய். அஃது அருவி என்பதாம். "தேனருவி திரையெழும்பி வானின் வழி ஒழுகும்" என்கிறார். திரிகூடராசப்பக் கவிராயர், குற்றாலக் குறவஞ்சியில். நம்மில் பெரும்பாலோர், நீர்வீழ்ச்சி எனும் சொல்லைத்தான் மிகுதிக்கண் பயன்படுத்துகிறோம். அஃது ஆங்கில வழி பேச முற்படுதலும், தமிழை அறிய விழையாததும் ஆகும். நமது, புகழ் வாய்ந்த திரைதுறைக் கவிஞர் திரு வைரமுத்து, அமெரிக்க நாட்டின் நாயகராவைப் பார்த்து, "இது, நீரின் வீழ்ச்சி அல்ல, எழுச்சி" என்றெழுதினார். தமிழில் நீர் நிலைகளுக்கு பத்துக்கும் மேற்பட்டச் சொற்கள் உண்டு. தமிழ் ஒரு செவ்விய மொழி என்பதில் கிஞ்சித்தும் ஐயம் வேண்டாம். தமிழில் மட்டுமே மரபு வழியில் பெயர் உண்டு. புல் இனத்தைச் சேர்ந்தது என்பதால் தான், மூங்கிலில் பிறந்தது புல்லாங்குழல் ஆனது. கடல், இதற்குப் பரவை எனும் பெயரும்

உண்டு. ஏரி, தாங்கல், குளம், குட்டை ஆகியவை தன்னுள்ளே நீரைத் தேக்கி வைத்துக் கொள்ளும். ஏரியின் சிறு வடிவமே தாங்கல். குட்டைக்கு வடிகால் இருக்காது. ஓடை, ஆறு, வாய்க்கால், என்பன நீரோட்டம் கொள்வன. கண்மாய் என்பது, தேக்கியும் வைக்கும், ஓடவும் வழி செய்யும். உலகில் பல அரசர்கள், கோட்டைக் கொத்தளங்கள் கட்டி ஆண்ட போது, திருமா வளவன் எனும் பட்டம் கொண்ட கரிகால் சோழன், (கரி எனில் யானை , யானைப் படையை திறம்பட நடத்துபவன்) நீரைத் தேக்கி, வேளாண்மைக்கு பயன்படுத்தும் அறிவு கொண்டு, கல்லணையைக் கட்டினான் அல்லவா? நிறைய பதில் அளித்து விட்டேன். கேட்டவர் பெயர் தெரியவில்லை. படிக்கப் போகிறாரோ எனவும் தெரியாது. யாரேனும் எவரேனும் படித்தால், இறும்பூது எய்துவேன். நன்றி! **11-05-2020**

## 'PUMP' என்பது நீரை உள்ளே இழுப்பதா? அல்லது வெளியில் தள்ளுவதா? இதற்கு பொருத்தமான தமிழ்ச் சொல் என்ன?

நிரப்புதல், சேமித்தல், சேர்த்தல் எனும் பொருள்தான் விரவும். In case of Motor pumping water, the compressor motor is pushing the air and makes water to blow up from bore well. Jet motor sent air for replacement. The ordinary or normal motor pulls the water and air is getting replaced by nature theory. எனவே தள்ளுதல், இழுத்தல் உறிஞ்சுதல் ஆகிய செயல்பாடுகள் உண்டு. Switch போடு, Light off பண்ணு, வண்டிய கிக்பண்ணு, லெப்ட் எடு, காரைஎடுன்னு, தமிழ் வளர்க்கும் போது, தங்களுக்கு ஏன் இவ்வளவு ஆர்வம்? **24-11-2020**

## வரட்சி-வறட்சி, எது சரியானது? அதே போல் சில்லரை-சில்லறை, எது சரியானது?

வறட்சி, சில்லறை இவை மட்டுமே சரியானவை.இடையினம் கொண்டு சொற்கள் இல்லை. பறவை தெரியும். **பரவை எனில் கடல். அரம், கத்தி போன்று வெட்டுவது. அறம், நேர்மையான செயல். 28-11-2020**

## மிகச்சிறந்த தமிழ் பெண் பேச்சாளர்கள் யாவர்? அவர்களின் பேச்சுத்திறன்களைக் கண்டு வியந்த தருணம் உண்டா?

திருமதி பாரதி பாஸ்கர் பட்டிமன்றப் பேச்சாளர். பொது மேடைகளில், இலக்கிய வட்டாரத்தில், மாணவர் மத்தியில், சிறந்த கருத்து தருபவர் திருமதி பர்வீன் சுல்தானா. பேராசிரியர் சாரதா நம்பி ஆரூரன், சிறந்த சமயச் சொற்பொழிவாளர். பீடிகை, கிளக்கதைகள் இல்லாமல், நேரடியாக, தேவாரத் திருவாசக மேற்கோளுடன் பேசுவார். **19-11-2020**

## திருக்குறளில் உங்களுக்கு பிடித்தமான குறளை பொருளுடன் விளக்க இயலுமா?

எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.
ஏதிலார் குற்றம்போல் தன்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு!
பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்
கற்கக் ககசடறக் கற்பவைக் கற்பவைகற்றபின்
நிற்க அதற்குத் தக **18-12-2020**

## தமிழன்னை, தமிழ்க்கடவுள் என இருவர் ஏன்? இருவருக்கும் ஏதேனும் ஒற்றுமை உள்ளதா?

தாய்நாடு, தாய்மொழி எனும் சொற்களைத் தமிழில் புகுத்தியவன் பாரதியே! **யாதும் ஊரே யாவரும் கேளிர்** என வாழ்ந்தவன், வாழ்ந்து வருபவன்தான் தமிழன். திருமால், சிவ வழிபாடு போல் முருக வழிபாடும் இருந்துள்ளது. அது, கௌமாரம் என்றழைக்கப் பட்டுள்ளது. இன்றைய இந்தியாவின் வட பகுதியில் போற்றத் தகுந்த அளவுக்கு, முருகன் வழிபாடு இல்லை. பிரணவம் எனப் படும், ஓம் என்னும் பிரபஞ்ச ஒலியை ஈசனுக்கு புகட்டினான் என்பதால், அவன் தமிழ்க்கடவுளாகப் போற்றப் பட்டிருக்கலாம் ம் . உன்சீரிளமை திறம் வியந்து போற்றுகிறேன் என மனோண்மணியம் சுந்தரம் பிள்ளை, எழுதிய பின்னால், கால்டுவெல் திராவிட மொழி ஒப்பிலக்கணம் எழுதியதால், மொழி அன்னையாகப் போற்றப் படலாயிற்று. தமிழ் ஒரு செவ்விய மொழி ., மூங்கில் புல்லின் இனம் என்பதால், அதனால் செய்யப் படும் குழல் புல்லாங்குழல் ஆனது. **19-07-2020**

## அவை, இவை எனும் பன்மை சொற்களுக்கு அவைகள், இவைகள் என்கிற சொல்லாடல்கள் இலக்கணப் பிழைகள் தானே?

**ஆம் தவறே! அது, இது,** என்பவையே பன்மையில் அவை இவை யாகும். இது குறித்து, டாக்டர் மு.வ. தனது, மொழியியல் வரலாறு நூல், தொகுதி மூன்றனுள் தெளிவு படுத்துகிறார். அவைகளை இவைகளை என்றும் எழுதுகின்றனர். அதுவும் தவறுதான். .அவற்றை இவற்றை என எழுதலாம், இது போல் உது எனும் ஒரு சொல்லாட்சியும் இருந்துள்ளது. இதனைத் தொல்காப்பியம் விளக்கும். தொண்டு, என்பதுதான் ஒன்பது என்றானதால் (பத்துக்கு ஒன்று குறைவு என்பதாக), தொன்பது, என்பதனை, தொன்னூறு என்றாக்கி, பின் தொள்ளாயிரம் எனவும் பிறழ்ந்து, வழங்கிவருகிறது. இலக்கணம் கூறுமிடத்து, தொல்காப்பியரே திணறுகிறார். **21-06-2020**

## முன்மொழிதல் வழிமொழிதல் இரண்டுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

ஏதேனும் ஒரு பணி சார்ந்த அவையில், குழுவின் நலனுக்கோ மக்களின் நலனுக்கோ உரிய வகையில் செயல் திட்டங்கள் கொண்டு வருதல் முன் மொழில் . .அதனை முதலில் வரவேற்பவர் வழி மொழிந்தவராவார் **18-06-2020**

## சஸ்பென்ஸ் கு ஈடான தமிழ்ச் சொல் என்னஇதற் -?

இடை நீக்கம்

**26-07-2019**

## தமிழ் உச்சரிப்பு ஏன் இப்படியெல்லாம் சிலரால் தகர்க்கப்படுகிறது? “உங்கல் கனவுகல் நனவாக ஆட்டிகாவுக்கு வாங்க”

தமிழ்தானே என்று பலரும் எண்ணத் தலைப்படுகிறார்கள்கற்பிப்பவருக்கும் . .லைக்குக் காரணம்கற்பவருக்கும் அக்கரை இன்மையே இந்நி மொழி என்பது, தகவல் பரிமாற்றுக் கலன் என்பதாகவேக் கருதுவதே காரணம்மொழி வாழ்வியல் . .கலாச்சாரத்தின் அடையாளம் என்பதை உணராத அறியாமையே அது நெடிய கலாச்சாரம் கொண்ட மொழி தமிழ்அதன் வளமை தமிழர் பலரும் உணராதக் காரணம் ., மூன்று வேளையும் உண்பவன் பசி அறியான்செல்வாக்கு மிக்க ஆங்கிலத்தில் பலவற்றுக்குச் . உ .சொற்கள் இல்லைலகிலேயே, அனைத்துக்கும் அதன் தன்மையைப் பொருத்து பெயரிடப் பட்டுள்ளது தமிழ் மொழியின்கண் மட்டுமேதண்மையான நீரே தண்ணீர் ! புல்லின் !மரபியல் வழியிலும் பெயர்கொண்ட மொழி தமிழ் மட்டுமே .ஆனது போல் இச்செய்திக .மூங்கிலிலிருந்து பிறந்தமையால் அது புல்லாங்குழலாயிற்று இனமானளை அறியாதவர் எவரேனும் படிக்க நேர்ந்தால், அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச் செல்வர் எனும் நம்பிக்கையோடு இதனைப் பதிப்பிக்கிறேன்சிறுமைக்கு வல்லினமும் . காலத்திலேயே பெண்பார் புலவர் சங்க .பெருமைக்கு இடையினமும் கொடுத்தது தமிழ் உலகாண்ட மன்னரெல்லாம் கோ .இருந்துள்ளனர்ட்டைக் கொத்தளங்கள் அமைத்து வாழ்ந்த போது, கரிகாற்சோழன், ஆயிரம் ஆண்டுகள் முன்னே நீரைத் தேக்கி, வேளாண்மைக்குப் பயன் படுத்தும் நிலை கண்டான்உலகின் காப்பியங்கள் யாவும் ., அரசனைப் பாட்டுடைத் தலைவனாக, நிறையும் போது, ஓர் இளவரசன் கண்ட, சிலப்பதிகாரம் ஒரு குடிமகளை, பெண்ணைப் பாட்டுடைதலைவியாக்கியது .2500 ஆண்டுகளுக்கு முன் நீதி கேட்ட நெடிய வரலாறாக அது கருதப் படுகிறதுபடித்தோருக்கு . !நன்றி **08-07-2020**

## "ரொம்ப போர் அடிக்குது! இதைத் தூய தமிழில் எப்படிச் சொல்லலாம்?

பொழுது கழிய வில்லை/ ! செம்மையாகச் செல்லவில்லைஉருப்படியான . வேலையில்லை பொழுது கழிய! பொழுது கழியாமல் துன்பம் தருகிறதுசோம்பலாக . .உள்ளது **18-06-2020**

## ரயில்வே ஸ்டேஷனில் முன்பெல்லாம் ஓட்டுனர் ஒரு பெரிய வளையத்தை போட்டுவிட்டு மற்றொரு வளையத்தை வாங்கி செல்வார் ..அதிலிருந்து ஒரு Metal ball எடுக்கப்படும்அது எதற்காக .? அது எப்படி பயன்படுத்தப்படுகிறது?

அஃது ஒற்றை வழித்தடங்களில் இன்றும் பயன்படுத்தப் படுகிறதுஅடுத்த . நிலையத்திலிருந்து, வண்டி வரலாம் எனும் சமிக்ஞை இருந்தால்தான், நிலைய கண்காணிப்பாரால், அதனை உரிய Machine லிருந்து எடுத்து வண்டியை அனுப்ப முடியும் . அதனை ஸிக்னல் கீ என்பர் உருண்டைக்கு முன் அது .Spanner வடிவத்தில் இருக்கும் . தற்போதும் செங்கல்பட்டு, விழுப்புரம் மார்க்கத்தில் பயன்பாட்டில் உள்ளது. . **15-05-2020**

## கிருஷ்ணாயில் என்ற பெயர் மண்ணெணய்க்கு எப்படி ஏற்பட்டது?

கெரசின் ஆயில் என்பது, வழக்கில் கிருஷ்ணாயில் என்றானது எனும் புரிதலில் இருந்தேன்வெள்ளந்தியான பூர்வ சென்னை வாசிகளின் ., உருது, தெலுங்கு, ஆங்கிலம் கலந்த சென்னைத் தமிழ் இராயபுரம் பகுதியிலும் தற்போது கேட்பதில்லை .சென்னைத் தமிழ் இளையோரிடத்து இல்லாததால் காலப் போக்கில் மறையும்கோவை கொஞ்சு . தமிழ், நெல்லை அழகு தமிழ், மதுரை இயற்றமிழ், தஞ்சை செந்தமிழ், யாவும் கொஞ்சம் சிதைற்றிருந்தாலும் சிறிது காலம் வாழும் எனத் தோன்றுகிறது. **ஐய, என்னான்ற வெளங்கிச்சாதுண்ணுட்டு மச மசன்னுநிக .ாம கெளம்பு கய்தே**! **25-01-2021**

## இந்தியா என்ற நாடு எப்பொழுது உருவானது?

தங்களின் கேள்வி உண்மை யான தேடலாயயின், அறிந்த வகையில், வரலாற்றுப் பின்புல, செவிவழி அறிந்தன வழியில் இப்பதில். பரந்துபட்ட இந்த இந்திய தேசம் விடுதலைக்குப் பின்தான் உண்மையில் உருவானது. அப்போது உள்துறை அமைச் சராயிருந்த சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள், சில சமஸ்தானங்களை புதிய இந்தியாவில் இணைத்தார் (அவை பெரும்பாலும் பிரிட்டிஷ் அரசுக்கு கப்பம் கட்டியவை). பண்டை நாளில், **56** தேசங்களாக சிறுசிறு நாடுகளாயிருந்தன என்பர். மௌரியர் ஆட்சியில் இன்றைய பாகிஸ்தான் சேர்ந்த பெருநிலபரப்பாயிருந்து. பின்னர் மொகலாயர் காலத்திலும் பெரு நிலபரப்பே .பிரிட்டிஷ் காலத்தில்தான் தென் பகுதி சேர்ந்தது. **13** ம் நூற்றாண்டுக்குப்பின், தமிழ்நிலம் மராத்தியர், நாயக்கர்களால் ஆளப்பட்டது. விஜயநகரப் பேரரசு விரிவடைந்த போது, கிழக்கிந்திய கம்பெனி எனும் நிறுவனம் கல்கத்தாவில் தொடங்கி, ஆங்கிலேயர் கைப்பற்ற, ஆட்சியைப் பிடித்தது. நிற்க, தங்கள் கேள்விக்கு வருவோம். பாலை நிலத்திலிருந்து இங்கு வந்த முகலாயர்கள், இந்தச் சிந்து நதித் தீரத்தை, **இந்துஸ்தான்,** பசுமைவெளி என்றனர். அதுவே பிரித்தானியரால் இந்தியா என்றாக்கப்பட்டது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பில், இசுலாமியர், கிறிஸ்தவர் அல்லாதவரை **இந்து** என்றாக்கி இந்து மதத்தைத் தோற்றுவித்தனர். இதனை மகாப் பெரியவர் எனப் படும் சந்திரசேகர சாமிகள் தனது இந்து தர்மங்கள் எனும் நூலில் விவரித்துள்ளார்கள். இந்தியா ஒரு துணைக் கண்டம். வெவ்வேறு கலாச்சார மொழி பின்னணியுடன், இங்கு வெவ்வேறு முறையான மத வழிபாட்டு முறைகளையும் கொண்டிலகுவதால், இது ஒரு **துணை கண்டமே**! **29-01-2021**

## இணையம் என்ற தமிழ் சொல்லின் ஆங்கில பொருள் யாது?

இணை யென்றால் இணைத்தல் அல்லது சேர்த்தல் என பொருள் படும்இணை . என்னும் வினை ஆகிய வேர்ச் சொல்லோடு அம் ஆகிய சாரியை சேர்ந்து, இணையம் ஆகிறதுஇணைக்கின்ற கூட்டுகின்ற அமைவு என்பதால் ., இணையம் என்றனர் .Internet என்பது நேரிட்ட தமிழில் வலைப்பின்னல் என்றாகும்தொல்காப்பிய இலக்கணப்படி ., ஒவ்வொரு சொல்லும் பொருள் குறித்தனவே என்பதாம்அவ்வடிப்படையில் தான் புதிய . .சொற்களை உருவாக்குவர் **31-01-2021**

## திங்கள்என்ற தமிழ் சொல்லின் பொருள் என்ன -?

அடிப்படையில் பெயர் சொல். ஒரு கிழமையின் பெயராகவும் மாதத்தைக் நிலவின் சுற்று .குறிப்பதற்கும் உரியது.**30** நாட்களும், அதற்கு திங்கள் எனப் பெயரும்

உள்ளதால் மாதம் திங்கள் ஆனதுசெம்மை செவ்வாய் ஆனது போல் ., பெரியது வியாழன் ஆனது, வெளிச்சம் வெள்ளி ஆனது போல் திங்களுக்கு குறியீடு இருப்பதாய் தெரியவில்லைஇந்தியாவில் மட்டுமல்ல ., உலகிலேயே இவ்வளவு செவ்விய இலக்கண வரையறை கொண்ட மொழி இருப்பதாய்த் தெரியவில்லை. **01-02-2021**

## தூய தமிழில் துணி மற்றும் பல் பொருள் அங்காடிக்கு பெயர் சொல்ல முடியுமா?

துணிக்கு கோடி என்பது பழந்தமிழ் வழக்குதற்போது ., இறந்த உலின் மீது சுற்றும் துணி மட்டும் கோடி ஆக வழங்கப் படுகிறது !அங்காடி என்பதே பொதுப் பெயர்தானே . சிலப்பதிகாரத்தில் மால் அங்காடி, அல்லங்காடி என மாலை நேரத்து கடைகளையும் இரவு நேரத்து கடைகளையும் குறித்து வரும்பேரங்காடி ., சிறப்பங்காடி என்பனவும் பொருந்துமே! Car ஐ விட முடியும் அல்லது ஓட்ட முடியும் .எடுக்க முடியாது .Take எனும் ஆங்கிலச் சொல்லை மொழிமாற்றி பேசுவது போல் தான், பல சரக்கு கடையினின்று பிறந்த பல் பொருள் அங்காடிகடைசி எனும் நிலையில் .கடையும் தமிழ்ச் சொல்தானே ., விளைந்த உற்பத்தி ஆன பொருட்களின் கடைசி நிலையாய் மக்களை அடைவதால் கடை யாயிற்று.

## மறுபிறவி என்பது உண்மையா? கர்மா கர்மவினை இவை உண்மையில் இருக்கின்றனவா? ஒரு சித்த வைத்திய சாலையில் பணிபுரிகிற ஒருவர் கூறியதுஉயிர் என்பது வெறும் காற்று அது உடலில் இருந்து : ல் காற்றோடு காற்றாக கலந்துவிடும் என்று கூறினார்பிரிந்தா, இதில் எது உண்மை?

இந்த உலகம் எதற்காக இயங்குகிறது? 15 -வது வயதில் தோன்றிய கேள்வி ! அழிவதற்காக, ஒவ்வொன்றும் படைக்கப்டுவானேன்? ஓர் உயிர் அழிந்துதான் இன்னொன்று வாழ முடிகிறதுஅதைத்தான் !சக்தி இந்த இயக்கத்திற்கு பின்னால் ஓர் இயங்கு . இறைவனாக வேவ்வேறு நிலைப்பாட்டில், மதங்களாக கொண்டுள்ளோம்காயமே இது " . பொய்யடா, வெறும் காற்றடைத்த பையடாஒரு தொடர் வாழ்வின் நில "ையாமையை கூறும்இறைவன் இறுதித் தீர்ப்புக்கு இறைவன் வருவான் எனும் நம்பிக்கை . இசுலாமானவர்களுக்கு இருந்தாலும், உடல் மண்ணில் சேர்தலே நிலை எனும் நிலைப்பாடுஆன்ம சொரூபமாய் .தமிழர்க்கு எரித்தல் பின்னாளில் வந்த வழக்கம் . இறைவனை உள்ளங்கடந்த கடவுளாக வழிபடுவது சைவ சித்தாந்தம்வைணவத்தில் ., யாவுமே இறைவடிவம்மறுபிறவி முதலான யாவும் மகான்களும் சித்தர்களும் . விண்டவர் கண்டிலர்" இதனை .மை தெரியும்இறந்தபின்தான் உண் .விளம்பியவை; கண்டவர் விண்டிலர்.என்பர் " **05-02-2021**

## முதல் இரண்டு தமிழ்ச் சங்க காலங்களின் உண்மைத் (ஆண்டுகளின்) தன்மைறித்து கூற இயலுமா?

தமிழ் நா(ட்)டு அரசு ஒரு பதிவில் முதற்சங்க காலம் கி.மு. 10527 என வரையறை செய்துள்ளது. இச் செய்தி, பேராசிரியர் மதிவாணன் தொகுத்த, Quotations on Tamil and Tamil Culture எனும் நூலில் உள்ளது. பொதுவாக, நூல்கள், அக்கால கல்வெட்டு போன்ற பதிவுகள்,

நூலில் விவரிக்கப் பட்ட, கால நிலைகொண்டு கணிக்கலாம். வரலாறு என்பது, செவிவழி உள்ளிட்ட ஆதாரங்களைக் கொண்டு முடிவு செய்யப் படுகின்றன. **05-02-2021**

## ஆங்கிலத்திலுள்ள ஒப்பந்தம் போன்ற ஒரு சட்ட ஆவணத்தினை தமிழில் கலைச்சொற்களுடன் பிழைகளற்று மொழி பெயர்ப்பது எப்படி?

சென்னைப் பல்கலைக் கழகம், தமிழ் அகராதி ஒன்றைக் கலைச் சொற்களுடன் வெளியிட்டிருந்ததுஅதில் வேர்சொற்கள் மூலம் ., விளக்கம் தரப் பட்டிருக்கும்அஃது ஒரு . நம்முடைய வட்டார .நேரிட்ட மொழிபெயர்ப்பு பயன் தராது .வகையில் பயன் தரலாம் வழக்குச் சொற்களோடு, கருத்தை, மனதில் உள்வாங்கி, பின்பு செயல் படுத்த வேண்டும் . .அப்போதுதான் அது செம்மை யடையும் **05-02-2021**

## இலக்கியம் என்றால் என்ன?

எல்லே இலக்கம் என்பது தொல்காப்பிய நூற்பா. இலக்கை நோக்கி இயம்புதல் இலக்கியம் ஆகும். இலக்கணம் என்பது. இலக்கு + அண் +அம் என்பதாகும். அண் - அணுகுதல், அம் சாரியை. இலக்கான, இலக்கியத்தை அடையும் வழிமுறை, வரையறை செய்வது. இவ்விளக்கம், பாவேந்தர் பாரதிதாசன், பாட்டுக்கு இலக்கணம் எனும் தனது நூலில் பகிர்ந்தது. பொதுவில், இலக்ஷியம், இலக்ஷனம் எனும் வடமொழிச் சொற்களே அவை எனும், கருத்து நிலவிய காலத்தில், பாவேந்தரது பதிவு. **05-02-2021**

## இரண்டு புருவங்கள் ஒன்று சேர்ந்தால் கணவன் மனைவி இருவரும் பிரிந்து சென்று விடுவார்கள் என்று கூப்படுகின்றதே, அது உண்மையா?

கூட்டுப் புருவம் மூட்டிவிடும் என்பது போல் சொல்வார்கள் அதாவது குடும்பத்தில் . .பிரிவினை என்பது போலாகும். இரண்டு சுழி தலையில் இருந்தால், இரண்டு மனைவி, செவ்வாயோ வெறுவாயோ, இவையாவும், ஏதோ காரணத்தால், மனத்தில் பதிப்பிக்கப் பட்டவை. ஆண் மூலம் அரசாளும்; பெண் மூலம் நிர்மூலம், சித்திரைக்கு அப்பன் தெருவில், சனி பிணம் தனி போகாது.ஆயில்யம் மாமியாருக்குஆகாது. சோதிடம் சார்ந்த பதிவுகள், கடவுள் நம்ம்பிக்கையைக் கொண்டிலங்கும். பதிவுக் ச்சோஆயில்யம் . இவை யாவும் சோ .மாமியாருக்கு ஆகாதுதிடம் சார்ந்த பதிவுகள் இந்த நம்பிக்கை . நம்பத் .கடவுள் நம்பிக்கைப் போன்றது தான் .யாவும் மனத்தின் பார்பட்டவை தொடங்கினால், சரியெனவே படும்செம்மையால் ., இருந்தமையால், செவ்வாய் எனப் பெயரிட்டவன் தமிழன் .வடமொழி முதலான மற்ற மொழிகளில் மங்களவாரம் என்பர் . அப்போது, பொருளே மாறுகிறது அல்லவாஆணும் பெண்ணும் ., என்றைக்குமே Made for each other அன்றுபொதுவில் ., யான் கூறுவதுண்டு, எல்லோருக்கும் அவரது தாய் மிகவும் அன்பானவர்ஆனால் ., அவரது தந்தைக்கும் Terror ஆன மனைவிஆண்களுக்கு ஒரு வித . கட்டுப்பாடு எப்போதும் தேவை, தன்னிலை யறியஅது ., தாயாகவோ மனைவியாகவோ அமைதல் வேண்டும்வுக்கரசராகிய மருள் நீக்கியாருக்குநா ., ஒரு தமக்கைஇத்தகையப் . பதிவுகளுக்கும், கேள்விகளுக்கும் காரணம், அனைத்து தொலைக்காட்சித் தொடர்களே ! பிறந்த நமக்கு, இறப்பு உறுதியானதுஆணும் பெண்ணும் இணைந்து வாழ்தல் . .இயற்கையின் கலன்இயைந்து வாழ்தல் என்பது, நாமே தேடிக்கொள்ள வேண்டியது . தனித்தன்மையில் உரசாமல் இருந்தால், பிரச்சினைகள் வராதுபுருவங்கள் சேர்ந்து . சிகப்பு .ஜோதிடத்தை வழிகாட்டியாகக் கொள்ளுங்கள் .இருந்தாலும் இல்லா விட்டாலும்

நிற ஆடை அணிந்து, இதனைப் படிப்பவர்(ஆணோ, பெண்ணோ), இதை எழுதியவருக்கு, ஜோதிடம் தெரியுமோ என எண்ணுவார்ஆகையால் .அவருக்குப் பதில் தெரியும் என்பதே . தான் மிகுந்த நம்பிக்கை, தளர்ச்சி உண்டு பண்ணும் என்பதையறிக. **10-02-2021**

## உங்களுக்கு பேசுவதற்கு ஒரு நிமிடம் மட்டும் வழங்கப்படும்; உலகில் உள்ள அனைத்து மக்களும் நீங்கள் பேசுவதை கேட்பார்கள்; நீங்கள் என்ன பேசுவீர்கள்?

நோக்கம் தெரியாது பிறந்தோம்!. வந்த விதமும் போகும் நாளும் இடமும் தெரியாது. இருப்பனவற்றில், மகிழ்வோம்! துன்பம், துயரம் என்பது எல்லோருக்கும் உண்டு. தேடலும் தேவையும் இல்லாத மனித இனமே இல்லை. விலங்குகள் பறவைகள் யாவும், இயற்கை வழியில் தான் வாழ்கின்றன. என்புதோல் போர்த்திய உடம்புடன் மண்ணில் வாழும் வரை, அனைத்தையும் அனைவரையும் நேசியுங்கள்! **10-02-2021**

## தமிழ்நாடு என்பது ஆங்கிலத்தில் 'Tamilnadu' என்று ஏன் பிழையாக புழக்கத்தில் உள்ளது? இதை 'Tamil Country' என மாற்றுவது தான் சரியானதுஇதை மாற்ற என்ன செய்ய வேண்டும் .?

தமிழ்நாடு என்பது பெயர்ச்சொல், தமிழர்நாடு, தமிழரின் நாடு, தமிழர் வாழும் நாடு எனப் பொருள்தரும் வகையில் வரும். திரு அண்ணா முதல்வராயிருந்த போது, மதராஸ் ஸ்டேட் என்னும் சென்னை மாகானம், தமிழ்நாடு மாநிலம் ஆகியது. பிரித்தானியர் காலத்தில் அது மதராஸ் பிரசிடென்சி (இராஜதானி). அதன் அடிப்படையில் தான் பிரசிடென்சி காலேஜ் ஸ்கூல் யாவும். நிற்க, தாங்கள் வினவும் வகையில் சேரநாடு, சோழ நாடு, இந்திய நாடு என்பதாகக் கொண்டால், சரி. ஆந்திரப் பிரதேஷ் உத்திர பிரதேஷ் உத்தர்காண்ட் என்பது போல், தமிழ் நாடு. அந்தாளில், பெயர் மாற்றம் செய்த பின்பு, திரு இராஜாஜியின் அறிவுரையின்/ வேண்டுகோளின் படி திரு அண்ணா ஒரு அரசானை பிறப்பித்துள்ளார். அதாவது, தமிழ்நாடு என்பதை ஒரு பெயர்ச் சொல்லாகக் கொள்ள வேண்டும். தமிழ் என்பது, பெயரெச்சமாகக் கருதலாகாது. தமிழ் நாடு அரசு என்பது தமிழ் இலக்கணப் படி, தமிழ்நாட்டு அரசு என்றுதான் வரவேண்டும். அந்தநிலையில் தங்கள் கேள்வியும் அதுதான். அதனை ஒரு பெயர்ச் சொல்லாக கருதல் வேண்டும். எனினும், அரசு பாடநூல் நிறுவனம், தமிழ்நாடுப் பாடநூல் நிறுவனம் என்றுதான் பதிப்பிகின்றனர். **10-02-2021**

## சுவாதி நட்சத்திரக்காரர்கள் நம்பத்தகாதவர்களா? பிறரை கொடுமைப் படுத்தி சுயநலம் பாராட்டி வாழ்பவர்கள் என்பது சரியா?

12 இராசிகள், 27 நட்சத்திரங்கள். நீங்கள் சொல்வதைப் பார்த்தால், ஒவ்வொரு இருபத்தேழு பேருக்கும் ஒருவர் அவ்வாறு அல்லவா இருத்தல் வேண்டும். உங்கள் கணக்குப் படி பார்த்தால், நவ கிரகங்கள் எல்லாம் சேர்த்து, 12*27*9 =2916 பேருக்கு ஒருவர் அவ்வாறு இருக்க வேண்டும். ஜோதிடம் ஒரு கலை. பொதுவில், நட்சத்திரம், இராசி இவற்றிற்கு ஒரு குணாதிசியம் சொல்வார்கள். அது அடிப்படையாகத் திகழும். பொதுவில், சில சொல்லலாம். ரேவதி நட்சத்திரக் காரர்கள், அனைவரிடத்தும் நன்கு பழகுவர். காரியச் சமர்த்தர். அதுபோல், சுவாதி, கொஞ்சம் தெளிவானவர்கள். யோசித்து செயல் படுவர்.

தேவையில்லாத வற்றில் தலையிட மாட்டார்கள். அவர்களது, லக்னம், கிரகங்களின் அமைப்பு, ஆகிவற்றைப் பொருத்து பலன்களும் மாறும், குணங்களும் மாறும். இலக்கனத்திற்கு ஐந்தில் குரு இருந்தால், கஞ்சன், ஒன்பதில், கிரகம் ஆட்சி, உச்சத்தில் இருந்தால், தகப்பனார், பெரும் தனவந்தராக இருப்பார். இவையெல்லாம், பொதுவானவை. எதிர்மறை சிந்தைகளை வளர்த்துக் கொள்ளாதீர்கள். கடவுளை அறிந்த சித்த புருஷர் சொல்வர், விதியை மாற்ற முடியாது. "**தீயதொரு கணையாலே கண்ணன் மாண்டான், ஏசு சிலுவையிலே செத்து போனான், இராமன் ஆற்றிலே வீழ்ந்தான், நோவாலே புத்தன் மடிந்திட்டான். நான் சாக மாட்டேன்"** என்கிறான் பாரதி. ஆகவே இவற்றையெல்லாம், கேட்டு, அகற்றுங்கள் மனத்திலிருந்து. பதிப்பித்துக் கொள்ளாதீர்கள். **25-02-2021**

## "5 G தெரியுமில்ல இப்போ 6G, 7G எல்லாம் வரப்போவுதில்ல எத்தன !G வந்தாலும் கஞ்ஜி விவசாயிதான் ஊத்தனும் ராசா என்ற புகழ்பெற்ற " சொற்றொடரை ஆங்கிலத்தில் அதன் சுவைமாறாமல் மொழிபெயர்க்க முடியுமா?

Whatever technology comes after 5G, as 6G or 7G, the food for our survival, we have to get from Agriculturalist only. **25-02-2021**

## குடவோலை முறை என்றால் என்ன?

சோழர் காலத்தில், மக்கள் பிரதிநிதியை தேர்ந்தெடுத்த முறைஇன்றைய ஜனநாயக . பெயர்களை .முறைக்கு முன்னோடி எனச் சொல்லலாம், ஓலையில் எழுதி, குடத்தினுள் இட்டு, எடுத்து தேர்வு செய்வர். **25-02-2021**

## பெரியம்மா மகனை திருமணம் செய்யலாமா?

பொதுவில் சட்டத்தின் அடிப்படையில் அனுமதி இல்லைதிருமணம் ஏற்றுக் . ஆயினும் .கொள்ளப் பட மாட்டாது, இஸ்லாமானவர்கள், மணம் செய்து கொள்ள அனுமதி வழங்குகிறது அவர்களது ஷரியத்எனினும் ., சிற்றப்பா பெரியப்பா மக்களை மணமுடிக்க அனுமதி இல்லை .ப்பதில்லைஅக்காள் மகள்களை அவர்கள் மணமுடி .மேலும், அவர்களிடத்தில், அக்காள் தங்கையை அண்ணன் தம்பிகள் மணமுடிக்கும் வழக்கும் இல்லை. **01-03-2021**

## வான்முகிலன்பெயர் அர்த்தம் என்ன -?

வான் என்பது வானத்தைக் குறிக்கும். முகில் என்பது மேகம். வானில் உள்ள முகில் போன்றவன். என்பதாகும். வான்முகில் எனும் பெயருடன் ஒரு கவிஞர் உள்ளார். **01-03-2021**

## அத்தை மகள், மாமன் மகள் இருவரில் எந்த உறவில் ஈர்ப்பு அதிகம்? ஏன்?

மாமன் மகளிடம் ஈர்ப்பு என்பதை விட, நெருக்கம் ஏற்பட வாய்ப்பு அதிகம்காரணம் ., தாயின், தந்தையும் தாயும் அங்குதான் பெரும்பாலும் இருப்பார்கள்பாட்டியால் ., சில சலுகைகள் கூடுதலாகக் கிடைக்கும்மாமி மட்டும்தான் ., வெளியாள் போல் தெரியும் . அத்தை வீட்டில், சமையல், அவரிடம் இருப்பதால், அண்ணன் அல்லது தம்பி மகன் எனும் வகையில் ஏற்படும் அதிக கவனம், அத்தையிடம் இருந்து மட்டும் தான் கிடைக்கும் .

ஆன .ப்பாடுஅத்தையும் சித்தியும் அன்பின் வெளி◌ால், அத்தையின் மாமனாருக்கும் மாமியாருக்கும் இவன் ஓர் உறவினன் மட்டுமே! **02-03-2021**

**உலகம் முழுவதும் மக்கள் இயல்பாக ஏற்றுக்கொள்ளும் உண்மைக்கு புறம்பான விஷயம் என்ன?**

அனுமானிக்க முடியாத அந்த இயங்கு சக்தியை அறிந்த மகான்கள் விளம்பியதை வைத்து, மதங்களைப் படைத்து, அதனால் மக்களுக்குள், அவர்தம் அறியாமையைப் பயன் படுத்தி வேற்றுமையை விதைத்து, தாங்கள் விரும்பிய வண்ணம் மக்களை ஆட்டிப் படைக்கும் மத வாதிகளின், பின் புலம் போல் நின்று, உலகை ஆளும் வணிகர்களின் உத்தி அறியாது, அரசியல் வாதிகளை மட்டும் குறை கூறிக்கொண்டு, இயன்நிலை அறியாது, மதங்களே அறிவு, வாழ்வு எனக் கருதும் அறியாமையே! 28-03-2021

**இராசி நட்சத்திரம் கொண்டு பிறந்த நேரம் அறிய முடியுமா? (29/11/1992, மகரம், திருவோணம் நட்சத்திரம்(**

வாய்ப்பு இல்லைநட்சத்திரம் என்பது ., கிட்டதட்ட நாள் முழுவதும் இருக்கும்இலக்னம் . என்பது, பிறந்த நேரத்தைக் கொண்டு கணிக்கப் படுவதுஅ்ஃது கிட்டதட்ட இரண்டு . ஒவ்வொரு மாதமும் .மணிநேரம் மட்டுமே இருக்கும், ஒரு லக்னம் தொடங்கும்இராசி . போல் இதுவும்12. அந்த நேரத்தைப் பிரித்து, தசாபுத்தியைக் கணக்கிடுவர். 13-04-21

**தமிழில் மொழிமாற்றம் செய்யப்படும் தெலுங்கு அல்லது இந்தி பாடல்களை தமிழாக்கம் செய்வதில் வைரமுத்துவை தவிர வேறு எவரும் சிறப்பாக செய்ததாக தெரியவில்லைஏன் அவ்வாறு மொழிமாற்றம் செய்ய பல . கவிஞர்கள் திணறுகின்றனர்?**

கேள்விக்கு நீங்களே பதில் கொடுத்து விட்டு, இனி யாரேனும் என்ன விளம்பினாலும் ஒப்புக் கொள்ள மாட்டீர்கள் .அந்த அரிதாரம் பூசும் பளபளப்பான மேடை உங்களுக்கு விளம்பரம் ஈட்டித் தரும்நானும் அந்த .நீங்கள் காணமுடியாத பலர் உள்ளனர் . கண்ணதானின் .மேடையைத் தேடி யுள்ளேன் **வசந்த கால நதிகளிலே வைரமணி நீரலைகள்** என்பது போல், நானும் எழுதியுள்ளேன். **வைகறை மேகங்களே வான்மழை தூவாயோ** என்று.விரும்பினால் யூ டியூபில் பாருங்கள் . **சிலருக்கு சிலவை சாத்தியம்** அவ்வளவே!11-04-2021

**கவிஞர் கண்ணதாசன் கவிப்புலமைக்கு ஒப்பீடு செய்யுமளவிற்கு, தொழில் ரீதியாகவும் கவிப்புலமை ரீதியாகவும் கவிஞர் வாலி எதிரியாக திகழ்ந்தாரா?**

இப்படியெல்லாம் சிந்திச்சு கேள்வி கேட்கச் சொன்னது யாருங்க? ஏதோ ஒரு தனித்தன்மை இருந்தால்தான் எந்த படைப்பாளனும் நிலைபெற முடியும். வெண்பாவையும், வள்ளுவனிடம், விருத்தப் பாவையும் எழுதக் கேட்பது போலுள்ளது தங்கள் கேள்வி. கண்ணதாசனின் **மயக்கமா கலக்கமா** பாடலே தன்வாழ்வின் திருப்புமுனை என பல இடங்களில் எழுதியும் பேசியும் உள்ளார் கவிஞர் வாலி. .இராமானுஜ காவியம் முதலான அவரது படைப்பு தனித்தன்மை யானவை பொதுவுடைமைக்கு பட்டுக்கோட்டை, காதல், வாழ்வியலுக்கு கண்ணதாசன். 07-04-2021

## முதலியார் ஜம்பம் விளக்கெண்ணய்க்கு கேடுஎன்ற சொலவடையின் " அர்த்தம் என்ன?

இது, ஜாதிச் சண்டையாகி விடாதா? முதலியார் என்பது பட்டமாயினும்இத்தகைய . பட்டப் பெயர்களை தமிழ் மக்கள் விடுத்து100 ஆண்டுகள் ஆகிவிட்டதுநிற்க ., மாண்புமிகுரா வீதிகளின் பெயர்களிலும் ஜாதியை நீக்க.கோ.ம ., வெங்கடேச மேஸ்திரி, வெங்கடேச கிராமணி வீதிகள், அருகருகே இருக்க தேடிய குழப்பம் உண்டு. வேளாண்குடி வழிவந்த தொண்டை நாட்டு சைவ வேளாளரும் துளுவ வேளாளரும் இப்பட்டம் கொள்வர்முகவை மாவட்டத்தில் ., தேவர் எனப் பட்டம் கொள்ளும் அகமுடையார், தஞ்சையில், பிள்ளை எனவும், அவருள் மரக்கறி உணவுக்கு மாறியவர், தேசிகர் எனப் பட்டம் கொள்வர்அவரே தொண்டை நாட்டி ., முதலியார் ஆவர்மேலும் ., நெசவுத் தொழில் வழிவந்த கைக் கோளர், செங்குந்தர் என்பாரும் முதலியார் பட்டம் கொள்வர் . பொதுவில், முதலியார் எனப் பட்டம் கொண்டோர், நிலவுடைமை சமூகமாகவும், வசதி கொண்ட நிலையிலும் வாழ்ந்துள்ளனர்எனவே., வாழை இலையில், விளக்கெண்ணெய் தடவி நெய் போன்ற தோற்ற முடையதாக வேண்டும் என்பதற்காக, என்பது ஏற்புடைத்தன்றுஅந்நாளில் ., வசதி யுடையோர் பரத்தையர் வீடு செல்லும் வழக்கம் உண்டாம்அம்மகளிர் காத்திருக்கும் நிலைவந்தால் ., விளக்கு எரிய எண்ணெய் விரையமாகும் என்பதாகவும் கேள்வியுற்றதுண்டு!யேயாவும் செவி வழி செய்தி . 08-03-2021

## குடவோலை முறை என்றால் என்ன?

சோழர் காலத்தில், மக்கள் பிரதிநிதியை தேர்ந்தெடுத்த முறைஇன்றைய ஜனநாயக . பெயர்களை .முறைக்கு முன்னோடி எனச் சொல்லலாம், ஓலையில் எழுதி, குடத்தினுள் இட்டு, எடுத்து தேர்வு செய்வர்.25-02-2021

## சென்னையில் உள்ள க்குகடற்கரை "மெரினா"மெரினா என பெயரிடப்பட்ட காரணம் என்ன?

மெரினா எனில் பரந்த மணல் வெளி என பொருள்படும் சொல்லாம்அகண்ட . கடற்கரை வெளி, மெரினா என்றனராம் ஆங்கிலேயர். 16-02-2021

## இரட்டை பெண் குழந்தைகளுக்கு என்ன தமிழ் பெயர் வைப்பது?

அங்கவை, சங்கவை.வள்ளல் பாரியின் மக்கள் . பாரியின் நண்பர், புலவர் கபிலர், நாட்டையும் தந்தையும் இழந்த மக்களை அழைத்து வரும்போது, தாங்கள் வாழ்ந்த பறம்பு மலையை நிலவொளியில் பார்த்து அற்றைத்திங்கள் அவ்வெண்ணிலவில்"..." எனப்பாடுகின்னர்அதாவது ., கடந்த மாதம் இந்நிலவு ஒளிரும் போது, எந்தையும் இருந்தார், மலையும் எங்களுடையதாக இருந்தது என்பதாகஇச்சிந்தனையை . கவிஞர் கண்ணதாசன், "அன்று வந்ததும் அதே நிலா .எனும் பாடலில் பதிந்தார் " எழிலரசி, கலையரசி, மலையரசி, பூங்குழலி, தேன்குழலி, வடிவழகி, பூவழகி, கண்ணகி, கண்மணி.16-05-2021

## மனித முகத்தில் அழகான பகுதி எது (பெண்/ஆண்)?

முத்தாகப் பல்வரிசைக் காட்டாத முறுவலே அழகென்போம்! கிள்ளை மடியமர்த்தி, உச்சி முகருங்கால், கண்கள் வடிக்கும் காதல் அழகென்போம்! —இது பெண்மைக்கு.

முறுக்கிய மீசை முறுவலில், கண்ணக் கதுப்பில், கோடாய் எழும்பி கண்கள் சுருங்கும் காட்சியும் அழகு! கைத்தலம் பற்றிய நங்கை தானும், பிள்ளையை சுமக்கும் பெருமித நாளில், கரங்களில் தாங்க முகமது கொள்ளும் பெருமிதக் கோலம் — இஃது ஆண்மைக்கு

25-05-2021

## கவிஞர் கண்ணதாசனின் எந்தெந்த பாடல்கள் சிறந்த தத்துவக் கருத்துக்களை உள்ளடக்கியது?

ஒன்றா; இரண்டா! அவை ஓராயிரம்!

1.கையளவே ஆனாலும் கலங்க மாட்டேன்!

கடலளவே ஆனாலும் மயங்க மாட்டேன்!

2. தந்தை வாழ்வு முடிந்து போனால் தாயின் மஞ்சள் நிலைப்பதில்லை!

தாயின் வாழ்வு முடிந்து போனால் தந்தைக்கென்று யாருமில்லை!

3.வீடுவரை உறவு வீதிவரை மனைவி காடுவரை பிள்ளை; கடைசிவரை யாரோ?

3. மயக்கமா! கலக்கமா! மனதிலே குழப்பமா? - முழு பாடலும்.

இன்னும் பல உண்டு! வலைதளத்தைத் தட்டுங்கள் திறக்கும்! கேளுங்கள் சுவையுங்கள்!

## 'எட்டடுக்கு மாளிகையில் ஏற்றி வைத்த' - இப்பாடலில் எட்டடுக்கு மாளிகை என்று கண்ணதாசன் எப்படிச் சொல்லுகிறார்?

என்சான் உடம்புக்கும் சிரசே பிரதானம் என்பது ஒரு பழமொழி! தலைக்குமேல் தூக்கி வைத்துக் கொண்டாடுகிறான் எனும் சொல் வழக்கு உண்டு. இப்பாடலும், தலைவன் தன்னை தலைக்கு மேல் தூக்கி வைத்துக் கொண்டாடினான் என்பதையே விளக்கும். அதாவது, என்சான் உடம்பே இங்கு எட்டடுக்கு மாளிகை எனப் படுகிறது!

## கடவுளை கண்ணனாக காதலனாக கைகுழந்தையாக கண்டு பிடித்து பாடி பரவசமாகும் ஒரு டிஜிட்டல் பாட்டை பரிந்துரைக்க முடியுமா?

தேடுங்கள் பாரதியைஆகா கண்ணன் .பின்பு கண்ணதானை !, கரிய நிறத்தோன் ! .மாயோன் காடுறை மாயோன் என்றார் தொல்காப்பியர்உள்ளம் நிறைக்கும் கள்வன் . .செவ்விய அழகிலும் சிங்காரப் பாட்டிலும் அவன் .அவன்ஆழ்வாரைக் கேளுங்கள் அவன் அழகைகருப்பூரம் நாறுமோ என்றாளே கோதை .அவன் தமிழ் மரபில் பிறந்த கடவுள் ! பத்தே பாட்டெழுதி பத்தாவது பாட்டில் .அவளைக் கேளுங்கள், அவனைச் சூடிய திருப்பாணாழ்வாரைக் கேளுங்கள்அவன் !, தாய், சேய், நல்லறிவுஇதையெல்லாம் . படித்தால் நீங்களே எழுதிவிடுவீர்கள்.

## தட்டச்சில் ஆங்கில எழுத்துக்கள் ஒழுங்கற்று இருப்பதற்கான காரணம் யாது?

அதனைக் கட்டமைத்தவர், எழுத்துக்களின் பயன் பாட்டின் அடிப்படையில் செய்துள்ளார் உயிர் எழுத்துக்கள் ஆன .A,E, I, O, U இல்லாமல் சொற்கள் இராது அல்லவா? (Try, My, Fly முதலான வற்றில் "I" யின் ஒலியனாக Y செயல் படுகிறது .( !இடது கட்டை விரலுக்கு வேலையில்லை .முறையாக பயின்றவர்களுக்குத் தெரியும் ) ஒவ்வொரு சுட்டுIndex) விரலுக்கும் ஆறு எழுத்துக்கள்முறையாக பயின்றால் ., விசைப்பலகையைப் )Key board) பார்க்காமல் தட்டச்சு செய்யலாம்விரல்கள் ! .வலிக்காதுஇன்றைய IT சமூக இளையர் ஏற்றுக் கொள்ளார்கட்டு கட்டாக பணம் . தேடலே வாழ்க்கை யென்று, இன்னொரு தேச தேடலில், நாகரீகம் என பிஸ்ஸா, பர்கருடன் வாழும் இவர்.சுட்டு விரலை மட்டுமே பயன் படுத்துவர் .

புன்னகையும் கொலுசும் இணைத்து பத்து சொற்களில் கவிதையொன்று கூற முடியுமா?

சில்லரை போல் சிலிர்ப்பூட்டும், சிந்தனையில் வியப்பூட்டும்!
அல்லல் தீர மனத்தில் அலுப்பை அகற்றி விடும்!

**நிலக்கடலையை நம்மிடமிருந்து பிரித்து விட்டு பாதாமையும் வால் நாட்டையும் நம்மிடம் திணிக்கும் கார்ப்பரேட் தந்திரம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

நிலக்கடலை நாமிட்ட பெயர்பூர்வீகம் ., மணிலாஅன்றைய தென்னார்கா .டு மாவட்டத்தின் பகுதிகளில் இன்றளவும் அதனை மல்லாட்டை என்பர்அதாவது மணிலா . வெளிநாட்டிலிருந்து வந்தனவற்றுள் இது மட்டுமே நன்மை .கொட்டை என்பதாகும் மிளகாய் .விளைவிப்பது, சிசிலியிலிருந்து வந்ததுமிளகைப் போன்று கா .ரம் தரும் காய் என்பதால் மிளகாய் ஆயிற்றுகொண்டைக்கடலை ., கடலைப் பருப்பு ஆகியவற்றின் தாயகம், வங்காளம் ஆதலால் தான் அது ஆங்கிலத்தில் .Bengal gram. இதே கடலை பின்பு, கோவைப் பகுதியில் விளைவிக்கப் பட்டதால், அதன் நிறம் சற்று வெளுப்பாகவும், கடலை முழிப்பாகவும் இருக்கும்.பர்அதனை நம்மவர் சுதேசி கடலை என் .

**ரயில் பயண சுகதுக்க அனுபவம் உண்டா-?**

ரயில் பயணம் ஒரு வகையில் மகிழ்ச்சித் தரக்கூடியது. இரவில் அந்தக் கடகட சப்தத்தில் தூங்க முற்படுவது. பகலில், மரங்கள் பின்னோக்கி ஓடுவதாய் நினைப்பது. ஏதாவது, தின்று கொண்டு, நூல் படித்துக் கொண்டு பயணிப்பது. இப்படி சுகங்கள். மிடில் பெர்த் வேண்டும் என நினைப்பது. இப்படி சில பல நினைவுகள். ஏசி வகுப்பு, முதல் வகுப்பு இப்படி யாவற்றிலும் பயணித்த அனுபவம் உண்டு. ஏன் பதிவில்லாமலும், இரவில் இருக்கையிலும் பயணித்ததுண்டு. அப்படி ஒரு நிகழ்வில், பதிவில்லாமலே வண்டியில் ஏறி, என்னை கண்டெக்டரைப் பார்க்கச் சொன்னவர். எங்கள் இருக்கையில் அமர்ந்து, வேறு இருக்கைக்குச் செல்லச் சொன்னது. தெரிந்தே, சில நிலையங்கள் முன்பாக ஏறி, எனது படுக்கையில் படுத்து வந்தது. காலை ஆறு மணிக்கு கிளப்புவது, மாலை நான்கு மணிக்கு கிளம்புவது எனும் வண்டிகள் 300 கி.மி. பயணத்துக்கு உசிதமானது. 500 கி.மி. மேல், இரவுப் பயணம் எளிமையானது. இனிதானதும் கூட. சில சமயம், பல கதைகள், சண்டைகள், புறம் பேசுதல் யாவும் காதில் விழும். குழந்தைகளின் ஆவல், குதுகுலம், இப்படி யாவும் கிடைக்கும். 16-09-2021

சிலர் ஏன் பிறர் காயப்பட்டாலும் பரவாயில்லை, தான் மகிழ்ச்சியாக இருந்தால் போதும் என நினைக்கிறார்கள்?

தங்கள் சொல்லும் செயலுமே மிகச் சரியானவை என எண்ணுபவர்கள்தான் பெரும்பாலும் அப்படி இருப்பார்கள்தங்களது தவறுகளை இயன் நிலையாயும் ! .இவர்கள் சிந்திக்காதவர்கள் .இவர் தனிரகம் .மற்றவருடையதை குற்றமாயும் காண்பர் தாம் மட்டுமே துன்புறுவதாய் பிதற்றி சுய பச்சாதாபம் தேடுபவர்கேட்ட தாங்கள் . நிலையுடையோர், தன்னைப் பற்றி முற்றிலும் சிந்திக்காமல், மற்றவரின் துன்பம் கண்டு மகிழ்பவர்தான் அத்தகைய கொடுமையான .பிறரைக்காயப் படுத்துவதில் வல்லவர் .

துன்பத்தைச் சந்திக்கும் போது, மாறலாம்ஆனால் ., முன்னவர் என்றுமே திருந்த மாட்டார். இங்கே முன்னவர் என்றது, தன் தவறுகளை இயல்பாயும், மற்றவருடையதை குற்றமாகவும் கருதுபவர்.

**தமிழ்நாடு என்பது ஆங்கிலத்தில் 'Tamilnadu' என்று ஏன் பிழையாக புழக்கத்தில் உள்ளது? இதை 'Tamil Country' என மாற்றுவது தான் சரியானதுஇதை மாற்ற . என்ன செய்ய வேண்டும்?**

தமிழ்நாடு என்பது பெயர்ச்சொல், தமிழர்நாடு, தமிழரின் நாடு, தமிழர் வாழும் நாடு எனப் பொருள்தரும் வகையில் வரும்திரு அண்ணா முதல்வராயிருந்த போது ., மதராஸ் ஸ்டேட் என்னும் சென்னை மாகானம், தமிழ்நாடு மாநிலம் ஆகியதுபிரித்தானியர் . அதன் அடிப்படையில் தான் .(இராஜதானி) காலத்தில் அது மதராஸ் பிரசிடென்சி .பிரசிடென்சி காலேஜ் ஸ்கூல் யாவும் நிற்க, தாங்கள் வினவும் வகையில் சேரநாடு, சோழ நாடு, இந்திய நாடு என்பதாகக் கொண்டால், சரிஆந்திரப் பிரதேஷ் உத்திர பிரதேஷ் . உத்தர்காண்ட் என்பது போல், தமிழ் நாடுஅந்தாளில் ., பெயர் மாற்றம் செய்த பின்பு, திரு இராஜாஜியின் அறிவுரையின்வேண்டுகோளின் படி திரு அண்ணா ஒர/ு அரசானை பிறப்பித்துள்ளார்அதாவது ., தமிழ்நாடு என்பதை ஒரு பெயர்ச் சொல்லாகக் கொள்ள வேண்டும்தமிழ் என்பது ., பெயரெச்சமாகக் கருதலாகாதுதமிழ் நாடு அரசு என்பது . தமிழ் இலக்கணப் படி, தமிழ்நாட்டு அரசு என்றுதான் வரவேண்டும்அந்தநிலையில் . அதன .தங்கள் கேள்வியும் அதுதான்ை ஒரு பெயர்ச் சொல்லாக கருதல் வேண்டும் . எனினும், அரசு பாடநூல் நிறுவனம், தமிழ்நாடுப் பாடநூல் நிறுவனம் என்றுதான் பதிப்பிகின்றனர்.

**நம் தமிழ் பழமொழிகளில் ஏதாவது அறிவியல் காரணங்கள் உள்ளதா அல்லது வெறும் மூட நம்பிக்கையா? விளக்க முடியுமா? 25-09-2021**

இப்படிக் கேள்வி கேட்பவரது நோக்கம் தெரிய வில்லை. UNESCO அங்கீகாரம் அளித்தும், முழுமையான அங்கீகாரம் கிடைக்கவில்லை. 1,2, 3 ஆகிய எண்ணுருக்களின் மூலம், தமிழின்று அரேபியா சென்று, உலகம் கண்டது, எனவே அதனை, International form of Indian Numerals என UNESCO அறிவித்துள்ளது. தங்களின் தேடல் உண்மையாயின், மாத்தளை சோமுவின் தமிழர்தம் அறிவியல் எனும் நூலை வாங்கிப் படியுங்கள். மரபியல் வழியில் (genetically) பெயரிட்டவன் தமிழன் மட்டுமே என்கிறார். காட்டாக, மூங்கில் புல் இனத்தைச் சார்ந்ததாகையால், அதனில் செய்யப் படும் காற்றுக் கருவி, புல்லாங்குழல் ஆனது.

**வாடகை ஒப்பந்தம் இல்லாமல் வீட்டை வாடகைக்கு கொடுத்து விட்டேன்தற்சமயம் . காலி செய்ய மறுக்கிறார்? ஆலோசனை வழங்க முடியுமா?**

வாடகை ஒப்பந்தம் என்பது, மிக முக்கியமான ஒன்று. அதில், பதினோரு மாதங்கள் என குறிப்பிட்டு, பின் அதனை தேவைப்படும் காலம் வரை கூட்டிக் கொள்ளலாம் எனவும், ஆண்டுக்கொருமுறை, வாடகை ஏற்ற வேண்டும் என்பதையும் குறிப்பிடப் படும். இனி,

பார்ப்போம். 10, 12 ஆண்டுகளுக்கு மேலாக அவர் குடியிருந்தால், வாடகைச் சட்டம் அவருக்கு சாதகமாகவே அமையும். இரண்டு மூன்று ஆண்டுகளாக எனில், நண்பர்கள் மூலம் வெளியேற்றச் செய்யலாம். வீடு மிகவும் பழையது எனில், அவர் நீட்டிய காலத்தைக் கோர முடியும், தங்களிடம் எவ்வித ஆவணமும் இல்லாத நிலையில். அதே நேரம், வீட்டைப் பழுது பார்க்க வேண்டும், என நீதி மன்றத்தில் தாக்கல் செய்து, சரிசெய்த பின்பு மீண்டும் தருகிறேன் என ஒப்புக் கொண்டால், காலி செய்யலாம். மீண்டும் விட்டே ஆக வேண்டும். அப்போது, புதிய வாடகை ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். தங்களுக்கு வேறு, சொத்துக்கள் இல்லை, வயது முதிர்ந்த தாய் தந்தையை கொண்டுவந்து வைத்துக் கொள்ள வேண்டியுள்ளது, மகன் அல்லது மகளுக்கு வீடு தேவைப் படுகிறது என நீதிமன்றத்தில், வழக்கில் நீங்கள் தாக்கல் செய்யலாம். அதனை எவ்வாறு ஏற்றுக் கொள்வர் எனக் கூற இயலாது. தாங்கள் அரசுப் பணியிலோ, பெரிய நிறுவனத்திலோ பணியிலிருந்தால், தாங்கள் வீட்டு வாடகையை வருமானத்தில் காட்டி யிருந்தால், தற்போது நன்மை பயக்கும். அதில், அவரது பெயரையாவது குறிப்பிட்டிருப்பீர்கள். அதனை வைத்து அவரிடம் பேசலாம். முன்பு ஒருவர் குறிப்பிட்டது போல, வழக்கு என்றால், எப்போது, முடியும் எனச் சொல்ல முடியாது. அவரிடமே மீண்டும் பேசுங்கள். தங்களுக்கு உண்மையில் வீடு தேவையெனில் அவர் காலிசெய்ய முன்வரலாம். அவருடைய நிலையையும் யோசியுங்கள். சாட்சிக்காரன் காலில் விழுவதை விட சண்டைக் காரன் காலில் விழுவதே மேல் எனும் ஒரு பழமொழி உண்டு. நினைவில் கொள்ளுங்கள். 24-10-2021

**மரபுக் கவிதைகளின் எண்ணிக்கை குறைந்து வருவதற்கு புதுக் கவிதைகள் மீதான ஆர்வம் அதிகரித்துள்ளதுதான் காரணமா?**

யாவுமே ஒரு கால மாற்றத்துக்கு உட்பட்டவையே! அதனை, பரிணாம வளர்ச்சி என்றே கொள்ள வேண்டும். தொல்காப்பியம், சங்க இலக்கியம் முதலானவை மரபுவழி என்றே கொள்கிறோம். இளங்கோ வடிகள் காலம் முழுக்க முழுக்க ஆசிரியப்பா. ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா,வெண்பா எனும் நான்கு நிலைகள் இருந்தன. குறள், நளவெண்பா ஆகியவை வெண்பாவகை. ஆசிரியப்பா மிகுதிக்கண் இருந்தாலும், வஞ்சிப்பா, கலிப்பா ஆகியவை இருந்தன. ஆசிரியப்பா எளிமையானது. அதுவே, விருத்தம் எனும் வகையில் நிறைய, கம்பர், சமய இலக்கியங்கள் யாவும், விருத்தமாயின. பாரதி, ஆசிரியப்பா, விருத்தம் ஆகியவை கைக் கொள்ள, பாரதிதாசன், கண்ணதாசன் முதலானோர் அவ்வாறே வளர்ந்தனர். பலவகையான விருத்தங்களை எழுதியவர் வள்ளலார். புதுக் கவிதை என அறியப்படும், அமைவின் முன்னோடி, பாரதியே. அவன் தான் வசன கவிதை என்றான். அதற்கும் ஒரு வரையறை உண்டு. அனைத்து பாக்களையும், அதாவது, புதுக்கவிதை, குறும்பா எனப் படும் ஹைக்கூ யாவையும், ஆசிரியப் பாவின் இலக்கண வரம்புக்குள் கொண்டுவர முடியும் என்பது, இலக்கணம் கற்ற புலவராய் இருக்கும் தமிழ்க் கவிஞர்களின் கருத்து. யான் அடிப்படையில் கணித மாணவன். அரசுப் பணியில், ஆங்கிலத்தோடு, பயணித்தவன், எழுத்து இறைவனின் கொடையாக நிறைவதால், அறிந்ததைப் பகிர்ந்தேன். 19-11-2021 (07.30 PM)

**உங்களால் எழுதப்பட்ட கவிதைகளை பகிர முடியுமா?**

**கனவுகள் பூக்கும்**!

கவிதை வேண்டுமென்று இக்களத்தில் கேட்டீர் அன்றோ!
புவியிதன் புதுமைபோலே பூத்தது கவிதை தானும்!
போயின துன்பம் என்றே துவளாமல் நினைத்திடுவோம்!
காவியக் காலம் போலே கவிந்திடும் இன்பம் யாவும்!

மாவிலைத் தோரணம் மடல்திறந்த வாழை யெனவாய்,
கூவிடும் சுற்றம் சூழ கொண்டாடும் திருவிழாவோ?
புவிமீதில் ஆடிய உயிர்க்கொல்லி சென்றதுவோ!
மேவிய வெள்ளமாய் மண்மணம் பூத்ததுவோ!

தாவிய துன்பம்கள் தளமின்றி போயிடுமே!
மேவிடும் காலங்கள் மேண்மையாய் ஆயிடுமே!
தேடிடும் அறிவால் தினமும் தேவைகள் அறிந்திடுவோம்!
நாடியே அவரவர் வழியில் இறைவனை வேண்டிடுவோம்!
- **கவிவளவன்** 24-11-2021 (9.45 பி.எம்.)

**கணவன் மனைவிக்கிடையில் தோன்றிய சிறு பிரச்சினைகளை ஊதி விட்டு பெரிதாக்கி மணமுறிவு வரையில் கொண்டுபோய்விடுவது தாயா, சகோதரிகளா, மாமியாரா, தோழிகளா அல்லது தொலைக்காட்சி தொடர் நாடகங்களா?**

**ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்**
**கூடி முயங்கப் பெறின்** - என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

இயற்கையாகப் படைப்பின் படி, அவர்களுக்குள் சேர்ந்து விடுவர். ஆனால், இன்றைய இளம் பெண்களைக் கெடுப்பது அவர்தம் தாய் மார்களே! அதுவும் சிறப்பாக, ஒரே பெண்ணாகவோ அல்லது இரண்டு பெண்குழந்தைகளோ உள்ள வீட்டின் தாய்மார்கள் தான் இவ்வாறு செய்கிறார். அந்த தகப்பன் மார்களுக்கும் அறிவு வேலை செய்வதில்லை. சமமான, அல்லது தகுதியான பொருளாதார நிலையுள்ள பெற்றோர் எனில், பெண்களின் ஆட்டத்துக்கு அளவே இல்லை. ஆண்களின் பெற்றோர் நல்லவராய் இருக்கும் நிலையில், அது மணமுறிவு வரை செல்வதில்லை. மகன் நன்றாயிருக்கட்டும் என விட்டுக் கொடுத்து விடுகின்றனர். கடல் போல், மாமனார் கட்டிய வீடு இருந்தாலும், தனிக்குடித்தனம் எனும் நிலையில் தொடங்கி, கணவனது வருவாயைக் காலி செய்யத் தொடங்குவர். கணவன் வீட்டில் அவனது பெற்றோருடன் இருக்கக் கூடாது, ஆனால், தன் தாய் தந்தையருடன் இருக்க வேண்டும். இதனால், கணவனுக்கு ஏற்படும் பொருளாதார நெருக்கடி, மன உளைச்சல், இவற்றைப் பற்றி யெல்லாம் இப்பெண்கள் கவலைப் படுவதில்லை. அவர்தம் தாய் தந்தையரும் கவலைப் படுவதில்லை. பெண்ணின்

தந்தை ஒரு முட்டாளாக இருப்பின் மோசமாகத்தான் இருக்கும். ஆணும் பெண்ணுமாக குழந்தை இருக்கும் போது, இவ்வளவு மோசமாக நிலைமை இருப்பதில்லை. அடிப்படையில், பெண்ணின் தாய்மார்களே நிலமைக்குக் காரணமாகின்றனர். 24-11-2021

**இன்றைய தமிழர் நிலை விவசாயம் சார்ந்து இல்லாதது ஏன்?**

அன்று வாழ்வியல் கலனாகவும் அரணாகவும் இருந்தது வேளாண்மை. அதை சார்ந்தே யாவும் நடைபெற்றன. வாழ்வியலுக்குத் தேவையானது உணவு. அது இன்றியமையாதது. அரசு, அரசர் என்பவர், பாதுகாப்பு, வரிவசூல் எனும் நிலையிலிருந்தாலும், மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் வண்ணம் வணிகம் நடைபெற்றது. ஆடை நெசவும் வேளாண் வழி பின்பற்றியே நிகழ்ந்தது. அன்றைய வாகனம், மாட்டு வண்டி மட்டுமே! குதிரை, அரசர் வீரர் பயன்பாட்டில் இருந்தது. அறிவியல் வளர வளர மனிதன் புதுப் புது வாழ்விடங்கள் நோக்கி பயணிக்கத் தொடங்க, வானூர்திகளும் பயன் பாட்டுக்கு வந்த நிலையில், வணிகம் தாண்டி, பொறியியல், அது சார்ந்த மேம்பாடுகள், தேவையான கலன்களாக, வாழ்வியல் புதிய பரிமாணம் கண்டது. 1980 க்குப் பின் வேளாண்மையும், ஆட்சியாளர்களால், புறந்தள்ளப் பட்ட நிலையில், பலரும் வெளியேறினர். ஆயினும், சிலர் அதனைத் தொடர்ந்து கொண்டுள்ளனர். இல்லையேல் யாவருக்கும் உணவு ஏது? அறிவியல் வளர்ச்சியே மாற்றத்திற்கு முதற்காரணம். 01-02-2022

**பாடல் வரி எழுதிய பின் இசை அமைக்கப்படுகிறதா? இசை அமைத்தப் பின் பாடல் வரிகள் எழுதப்படுகிறதா?**

இருவகையிலும் எனக்கு அனுபவம் உண்டு! கண்ணதாசனுக்கு முன்வரை, இசைக்குத்தான், மெட்டுக்கு ஏற்ற வகையில் பாடல்கள் பிறந்துள்ளன. அவருக்கு முதலில் வாய்ப்பளித்த இராம்நாத், பாடல் கொண்டு வா எனச் சொல்ல, **கலங்காதிரு மனமே** எனத் தொடங்கிய பாடலை, **கன்னியின் காதலி** எனும் படத்திற்கு எழுதினார். (ஐயமுடையோர் வனவாசத்தில் காண்க அல்லது, சினிமா சந்தையில் 30 ஆண்டுகள் நூலில் காண்க) கண்ணதாசனிடம் நல்ல மொழி ஆளுமை இருந்ததாலும், அவருக்கும், **மெல்லிசை மன்னர்களுக்கும்** நல்ல இயைபு இருந்ததாலும், பெரும்பாலும் எழுதிய பின்னே மெட்டமைக்கப் பட்டுள்ளன. கவிஞருக்கும் இசையமப்பாளருக்கும் , பாடகர்களுக்கும் தயாரிப்பாளர், இயக்குநர் ஆகியவரிடையே ஏற்படும் நல்ல புரிதலே பாடல்களை என்றும் நிறுத்தும். **கண்ணே கலைமானே எனும்** அவரது கடைசி பாடலுக்கு இசையமைத்தவர், இசைஞானி **இளையராஜா**. நிற்க, என்னைப்பற்றிய பதிவுக்கு வருகிறேன். 2011 ஆண்டு, ஆடியோ மட்டும் **ஒரு சொல்** எனும் படத்திற்கு வந்தது. அதில் எனது பாடல்கள் மூன்று. ஒரு பாடல் எழுதிய பின்னும், மற்றவை இசைக்கும் புனையப்பட்டவை. அதே காலக்கட்டத்தில், **கனவின் ஓசைகள்** எனும் தலைப்பில் தனியே ஓர் இசைத் தொகுப்பு வெளியிட்டேன். அதில் பத்து பாடல்கள். இரண்டு பாடல்கள் தவிர மற்றவையாவும் வெவ்வேறு காலக் கட்டங்களில், எழுதப்பட்டவை. ஆகையால் அப்போதுதான் இசையமைக்கப் பட்டது. இசையமைக்கப் பட்ட ஒரு பாடலை திரு SPB பாட விழையாததால், அதே இசைக்கு புதியதாக ஒன்று எழுதினேன். அப்பாடல், **சொல்லுக்குச் சொல்லடுக்கும் சுவையான** கவியமுதே எனத் தொடங்கும். அத்தொகுதியில் இடம் பேறும் **வைகறை மேகங்களே** எனத்தொடங்கும் பாடல், அடியந்தாதி வகையாகும். **வசந்தகால நதிகளிலே வைரமணி நீரலைகள்** எனும் **கண்ணதாசன்** பாடல் போன்று. அதனைப் பாடியவர் திரு **உன்னிக் கிருஷ்ணன்.**

விரும்புபவர்கள், **google** லில் **கவிஞர் கவிவளவன்** எனத் தேடினால், கேட்க முடியும். **ஐயப்பன் பாடல்கள்** மூன்றுடன், **கனவின் ஓசைகள்** பத்தும் you tube ல் வெளியிட்டுள்ளேன். ஐயப்பன் பாடல்கள் நண்பர் ஒருவருக்காக எழுதியது. சினிமாத்துறையில், பெரும்பாலும், ஏமாற்றுக் காரர்களாகவும், பணம் பறிப்பவராகவும் உள்ளதால், எனது முயற்சியை சரியாகத் தொடரவில்லை. புகழ்வாய்ந்த சிலர், சாதி, மதத் தொடர்பும் கொள்கின்றனர். எழுத்தாளர் **சுஜாதா** சொன்னது போல், அது ஒரு கனவுத்தொழிற்சாலை. சினிமாமூலம், நாம் தெரியப்படுத்தப் பட்டால், நமது அனைத்து எழுத்துக்களையும், மக்கள் படிப்பார்கள் எனும் உளக் கிடக்கையே காரணம்.

## பழங்கால தமிழருக்கு குலம் கோத்திரம் உண்டா?

ஐயா உண்டு. இன்று பலரும் மறந்து விட்டனர். **கோத்திறம்** என்பது தூய தமிழ்ச்சொல். சம்ஸ்கிருதத்தில், எழுத்து இன்மையால், அது **கோத்திரம்** ஆனது. தமிழரில் ஒரு சாரர், பட்டம் என்பர். கோத்திறமோ பட்டமோ, ஒன்றே ஆயின், அவர் ஏதோ ஒரு தலைமுறையில், ஒரு பாட்டன் வழி பிறந்தவராயிருப்பர். அந்நிலையில், கொள்வினை கொடுப்பினை நிகழாது (பெண் கொடுத்து பெண் எடுத்தல்). **சேக்கிழார்** என்பது கோத்திறப் பெயரே. ஆனால், இன்றளவும் தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் பிராமணரிடத்து, அவர்தம் உட் பிரிவுகளில்(வடமா, வாத்திமா, பிரஹசரணம், அர்த்த சாஸ்திரம்) ஒரே கோத்திரம் விரைவி வரும். முன்னெரெல்லாம், உட்பிரிவு தாண்டி , மணம் முடிப்பதில்லை. தற்போது செய்கின்றனர். அப்போது, அவ்வரையரை நோக்கப் படுகிறது. மழவராயர் என்பது பட்டமே. வில்வராயர், கல்லுவராயர், முதலான கோத்திறமே! 12-05-2022

## ஆங்கிலத்தில் மற்றவர்கள் எழுதியவற்றை அல்லது தாங்களே ஆங்கிலத்தில் எழுதியவற்றை கூகிள் ட்ரான்ஸ்லேட் செய்து, ஒரு (எடிட்டிங்) மாற்றமும் செய்யாமல் அப்படியே சுத்த தமிழ் ஒரிஜினல் மாதிரி நினைத்துக்கொண்டு இங்கு பதிவு செய்யும் பிரகிருதிகளை எப்படி வர்ணிக்கலாம்?

அதனை அவர்களது அறியாமை என்றே கொள்ள வேண்டும். மொழி பெயர்ப்பு செய்ய வேண்டுமெனில், இரண்டு மொழிகளிலும் நல்ல ஆளுமை வேண்டும். சிறப்பாக தாய் மொழியில், பரவலான அணுகு முறையுடன் கற்றிருக்க வேண்டும். அருவி என்னும் செஞ்சொல் விடுத்து, நீர் வீழ்ச்சி என்றுதான் மொழி மாற்றம் செய்த சொல்லைப் பயன் படுத்துகிறார்கள் பெரும்பாலான மக்கள். நாயகராவைப் பார்த்து நம் கவிஞர் ஒருவர் எழுதினார், இது நீரின் வீழ்ச்சி அல்ல எழுச்சி என்று. கவிதையில் அதனை இரசிக்கலாம். தமிழில் சொல் என்பதற்கு 18 சொற்களும், பேசுதல் என்பதை விளம்ப 46 சொற்களும் உள்ளன என்பர். நம்மில் பலரும், வார்த்தை எனும் சொல்லைத்தான் மிகுதிக் கண் பயன் படுத்துகிறோம். ஒன்றிய(மத்திய) அரசின் நிதித்துறை அலுவலகம் ஒன்றில், செவோத்தம் என்பதை, அழகு தமிழில் செவ்விய சேவை என மொழி பெயர்த்து இருந்தார்கள். வேலைவாய்ப்பு, பயிற்ச்சித் துறை என எழுதினால் போதும், அங்கு வேற்றுமை உருபு, தொக்கி நிற்கும். ஆனால், நாம் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை என்றுதானே எழுதுகிறோம்.

## கவிதை எழுதும் திறனை வளர்த்துக் கொள்வது எப்படி?

பழகப் பழக வரும் இசைபோல், படிக்கப் படிக்க வரும் கவி போல் என்கிறார், கண்ணதாசன். எமக்குத் தொழில் கவிதை என்றார் பாரதி. கவிதையைப் பற்றி கூறுமிடத்து, கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை,

*“உள்ளத்துள்ளது கவிதை - இன்பம்*
*உருவெடுப்பது கவிதை*
*தெள்ளத்தெளிந்த தமிழில் - உண்மை*
*தெரிந்துரைப்பது கவிதை” என்கிறார்.*

ஆங்கிலக் கவிஞர் Willam Wordsworth, Spontaneous out flow of thoughts என்கிறார். கவிதை என்பது, நம்மிடமிருந்து ஊற்றெனப் பிறக்க வேண்டும். கவிதை நூல்களை ஆழ்ந்து படிக்கும் வழக்கம் இருந்தால், எழுதும் உணர்வு பொங்கும். கவிதைகளைப் படிக்கப் படிக்கத்தான், வளர முடியும். வளர்த்துக் கொள்ளவும் முடியும்.
10-07-2022

## தமிழ் யாழினி- பெயர் அர்த்தம் கூற முடியுமா?

யாழ் என்பது, கம்பிக்கருவி. மீட்டும் போது, இசையை தரும். கலைத்தாய், எனப்படும், கல்விச் செல்வி, சரஸ்வதியின், கையிருக்கும் வீணையும் யாழ் வகையே! குழல், யாழ், முழவு எனும் முப்பெயர்களும் தமிழில் உண்டு. அவையே, நாதம், வீணை, மேளம் எனும் வேறு வகையான பெயர்களில் புழங்குகின்றன. யாழை மீட்டும் சரஸ்வதியைக் குறிப்பதாயும் சொல்லலாம். தமிழ் என்றாலே, இனிமை எனும் பொருள் தரும். **இனிமையாவள், தமிழைப் போலே** எனக் கொள்ளலாம். 30-07-2022

## தமிழில் 'ல', 'ள', 'ழ' என்ற மூன்றெழுத்துக்களும் வரும் சொற்கள் உள்ளனவா?

இன்று சாஸ்திரிய சங்கீதம் என்றழைப்படும் கர்நாடக இசை தமிழிசையே என குடந்தை சுந்தரேசனார் குறிப்பிடுவார். ச,ரி, க, ம, ப,த, நி எனும் ஏழு பண்களும் தமிழில், குரல், துத்தம் ஆகிய சொற்களால் அறியப் படிகின்றன என்னும் நிலைப் பாட்டை, அழகுடன் விவரித்தவர், தஞ்சையைச் சார்ந்த ஆபிரஹாம் பண்டிதர். இன்னும் எளிமையாகக் கூறு மிடத்து, மூன்று வகை இசை கருவிகள் உள்ளன. அவையாவன, காற்று, தோல், கம்பி முதலாவை. இவற்றிற்கு செந்தமிழில் பெயர் உண்டு. அவை, குழல், முழவு, யாழ் ஆகும்!இசை தமிழிசை என்பதற்கும், இது சான்றாகும். தங்கள் கேள்விக்கு வருவோம். இவை மூன்றும் இடையின எழுத்துக்கள் ஆகும். இவை மூன்றும் இணைந்த தமிழ்ச் சொற்கள் இருப்பதாய்த் தெரியவில்லை. சில பெயர்கள் உண்டு. அழகிய மணவாளன், களப் பணி கழகம். வலைத் தொழில் வளமை, இப்படி ஏதேனும் தேடித் திரியலாம். ழ வில் எண்ணிறந்த சொற்கள் உண்டு. ந என்பதே வட இந்திய மொழிகளில் கிடையாதே! ழ என்பது, தமிழில் சிறப்பு என்றாலும், அதனை பெரும்பாலும் முறையாக உச்சரிப்பது, மலையாளிகளே! 23-08-2022